## மே 4 - சர்வதேச தீயணைப்புப் படையினர் தினம்

- **வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி** யின் மருத்துவக் கல்வித் திட்டத்தின் **நூற்றாண்டு விழா** கொண்டாட்டத்தையொட்டி குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் பங்கேற்கிறார்.

- இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் மத்திய அரசின் நிதி அமைச்சகமும் , வளரும் நாடுகளுக்கான ஆய்வு மற்றும் தகவல் அமைப்பும் ஏற்பாடு செய்திருந்த **எதிர்காலத்திற்கான, விரிவாற்றலுடைய மற்று ம் டிஜிட்டல் மய உள்கட்டமைப்பு** தொடர்பான 4 **ஆவது பிராந்திய மாநாடு பெங்களூரில்** 04.05.2018 நிறைவடைந்தது.
- **சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி)** கவுன்சில் அமைப்பின் **27-வது கூட்டம்** 04.05.2018 நடைபெற உள்ளது.
- **ஜிஎஸ்டி வரி தாக்கல் செய்வதில் எளிமையான முறைகளை செயல்படுத்துவது** தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும் என்று தெரிகிறது.
- **புவி தகவல் முறை தொழில்நுட்பத்தைப்** பயன்படுத்திக் **கங்கை புனரமைப்புப்** பணியைச் செயல்படுத்துமாறு தூய்மை கங்கைக்கான தேசியச் செயல்திட்டம், 1767 இல் அமைக்கப்பட்ட **மிகப் பழமையான அறிவியல் துறையான சர்வே ஆஃப் இந்தியாவிடம்** கூறியுள்ளது.
- வெங்கையா நாயுடு **துணை ஜனாதிபதியாக** பொறுப்பேற்ற பின்னர் **முதல்முறையாக** வருகிற 6-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை **கவுதமாலா, பனாமா, பெரு** ஆகிய **வெளிநாடுகளுக்கு பயணம்** மேற்கொள்ள இருக்கிறார்.
- **ரேபிஸ் நோயை ஒழிக்க** தேவையான நடவடிக்கைகளை முடுக்கிவிடுமாறு இந்தியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு **உலக சுகாதார அமைப்பு (டபிள்யூஎச்ஓ)** வேண்டுகோள் விடுத்துள்ளது.
- **நியூயார்க் நகர சிவில் நீதிமன்றத்தின்** இடைக்கால நீதிபதியாக **இந்திய வம்சாவளியை** சேர்ந்த **தீபா அம்பேகர்** நியமிக்கப்பட்டுள்ளார்.

- மேலும் அமெரிக்காவில் நீதிபதியாகியுள்ள **இரண்டாவது இந்தியப் பெண்** என்ற பெருமையையும் **தீபா அம்பேகர்** பெற்றுள்ளார். அவருக்கு முன்பாக அமெரிக்காவில் 2015ம் ஆண்டு சென்னையை சேர்ந்த **ராஜ ராஜேஸ்வரி** நீதிபதியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.
- நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 85 சதவீதம் **மின்மயமாக்கலை** இந்தியாவில் "மிகவும் நன்றாக" பயன்படுத்தப்படுகிறது என்று **உலக வங்கி** பாராட்டு தெரிவித்து உள்ளது.
- **இலக்கியத்திற்கான நோபல் பரிசு** இந்த ஆண்டு 2018 வழக்கப்பட மாட்டாது - **ஸ்வீடன் அகாட**மி அறிவிப்பு
- புற்றுநோய் மருந்துகள் உள்ளிட்ட 28 மருந்துகளுக்கான **இறக்குமதி வரியை சீனா நீக்கியிருப்பதால்** இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்து வர்த்தக பற்றாக்குறை குறைய வாய்ப்பு உள்ளது.
- இன்ஜினில் ஏற்படும் கோளாறுகள் காரணமாக சமீபத்தில் 11 (**ஏர்பஸ் ஏ**320) விமானங்களை தனது **சேவை**யிலிருந்து இண்டிகோ நிறுவனம் **விலக்கிக்கொண்டது.**
- இண்டர்குளோப் ஏவியேஷன் லிமிடெட் (**இண்டிகோ**) நிறுவனத்தின் பங்குகள் 17.57 **சதவீதம் சரிவு**.
- **நியூசிலாந்து ஓபன் பேட்மிண்டன்** போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் **இந்திய வீரர் சாய் பிரனீத் அரையிறுதிக்கு** முன்னேறியுள்ளார்
- **சாம்பியன்ஸ் லீக் கால்பந்து** தொடரில் **தொடர்ச்சியாக 3-வது முறை** இறுதிப் போட்டிக்கு முன்னேறி **ரியல் மாட்ரிட் சாதனை** படைத்துள்ளது.
- **இறுதிப் போட்டியில் லிவர்பூல்** அணியை வீழ்த்தினால் தொடர்ச்சியாக 3-வது முறை சாம்பியன் பட்டம் வென்று சாதனைப் படைக்கும்.